**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**

**Spl.C.No. 01/2019**

**Prosecution Witness P.W. 27**

.....

Name : ரா.சஞ்சய் Calling :

Father's name : ராமகிருஷ்ணன் Religion :

Village : Age :

Taluk :

நாள் - **28.08.2025**

(1-வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டது. 2-ம் எதிரி ஆஜர்)

<u>முதல் விசாரணை:</u>

நான் ஏற்கனவே பணிபுரிந்த Max newyork life insurance என்ற கம்பெனியில் பார்ட்னர் மற்றும் நிர்வாக தலைமை உறுப்பினராக பணிபுரிந்தேன். 2015-ம் ஆண்டு அந்த பணியை ராஜினிமா செய்து விட்டு நான் தற்சமயம் தனியாக சொந்த தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கின் விசாரணை சம்மந்தமாக லஞ்ச ஒழிப்பு துறையிலிருந்து பெறப்பட்ட கடிதத்தின் நிமித்தம் 1-வது எதிரி தமிழரசி என்பவர் எங்கள் கம்பெனியில் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் மூன்று பாலிசிகள் எடுத்திருந்தார்கள். அவைகள் முறையே பாலிசி எண்கள் 606821015, 611553629, 601296668 ஆகும். முதல் பாலிசியில் காலம் 01.08.2008-ல் ரூ.20,000/-ம், 30.09.2009-ல் ரூ.20,000/-ம், 28.10.2010-ல் ரூ.20,000/-ம் மொத்தம் ரூ.60,000/- பிரிமியம் தொகையாக செலுத்தியுள்ளார். 611553629 பாலிசியில் 01.08.2008-ல் ரூ.20,000/-ம், 06.08.2008-ல் ரூ.10,000/-ம், 26.09.2009-ல் ரூ.10,000/-ம், 30.09.2009-ல் ரூ.20,000/-ம், 25.09.2010-ல் ரூ.20,000/-ம், 25.09.2010-ல் ரூ.10,000/-ம் மொத்தம் ரூ.90,000/- பிரிமியம் தொகையாக செலுத்தியுள்ளார். 601296668 பாலிசியில் 18.04.2007-ல் ரூ.20,000/-, 26.03.2008-ல் ரூ.20,000/-ம், 26.03.2008-ல் ரூ.1,000/-ம், 20.04.2009-ல் ரூ.20,000/-ம், 16.04.2009-ல் ரூ.2,050/-ம், 17.12.2010-ல் ரூ.23,153/-ம், மொத்தம் ரூ.86,203/- பிரிமியம் தொகையாக செலுத்தியுள்ளார். மேலே சொன்ன மூன்று பாலிசிகளிலும் அந்த காலகட்டத்தில் ஒட்டு மொத்தமாக

ரூ.2,36,203/- செலுத்தியுள்ளார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளரிடம் ஆவணங்களை ஒப்படைத்துள்ளேன். மூன்று பாலிசிகளுக்கு செலுத்திய பிரிமியம் ஸ்டேட்மெண்ட் **அ.சா.ஆ.**36. பாலிசி எண் 606821015-ல் பிரிமியம் செலுத்தியதற்கான ரசீது **அ.சா.ஆ** 37. பாலிசி எண் 601296668-ல் பிரிமியம் செலுத்தியதற்கான ரசீது **அ.சா.ஆ** 38. பாலிசி எண் 611553629-ல் பிரிமியம் செலுத்தியதற்கான ரசீது **அ.சா.ஆ** 39. (மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) இது சம்மந்தமாக என்னை லஞ்ச ஒழிப்பு துறை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**1-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஒரு நபர் பாலிசி எடுக்க வேண்டுமென்றால் Proposal Form கொடுக்க வேண்டும் என்றால் சரி. அந்த Proposal Form-ல் பாலிசியின் வகை, Health declaration, Financial Status, bank details, nominee details, Product details, premium details ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும், அந்த பாலிசிதாரரின் கையொப்பமும் அதில் இருக்கும். பாலிசி நகலை போலீசார்கள் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. 6 முறை பாலிசி பிரிமியங்களை பணமாக செலுத்தப்பட்டுள்ளது. 1-வது எதிரி தான் அவராக செலுத்தியுள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. சலான் போட்டு கட்டுவதில்லை. பணம் செலுத்தினால் ரசீது கொடுப்பார்கள். யார் ரசீது கொடுப்பார்கள் என்றால் Operation department/Service department உள்ளவர்கள் கொடுப்பார்கள். செலுத்துபவரின் கையெழுத்து பெறப்படுவதில்லை. பணம் செலுத்த வருபவர்கள் அலுவலகத்திற்கு உள்ளே நுழையும் போது அதற்கென்று Security-யிடம் உள்ள பதிவேட்டில் கையெழுத்து போட்டுதான் உள்ளே வருவார்கள். நான் சொல்வது போல் 1-வது எதிரி எவ்வித proposal கொடுக்கவில்லை என்றாலும், அவர் பெயரில் எவ்வித பாலிசியும் இல்லை என்றாலும், மேலே சொன்ன பாலிசிகளுக்கும் 1-வது எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. Insurance premium பாலிசிதாரர் சார்பாக யார் வேண்டுமானாலும் கட்டலாம். அசாஆ 38-ல் ரசீது வழங்கியவரின் கையெழுத்து இல்லை. ஆனால் அலுவலக முத்திரை உள்ளது. அசாஆ 38-ல் பணம் பெற்றுகொண்டவரின்

கையெழுத்து உள்ளது. ஆனால் அது யார் என்று எனக்கு தெரியாது. அசாஆ 39-ல் ரசீது வழங்கியவரின் Digital Signature உள்ளது. அது யாருடைய கையெழுத்து என்று எனக்கு தெரியாது. அசாஆ 36, அசாஆ 37, அசாஆ 38 மற்றும் அசாஆ 39-க்கும் 1-வது எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1-வது எதிரியின் குறுக்கு விசாரணை ஏற்று கொள்வதாக வழக்கறிஞர் மூலமாக தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.08.29 10:23:09 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.